சங்கீத ராகவம்

सङ्गीतराघवम्



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

ஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 472

॥ श्रीः ॥

चिन्नबोम्मभूपालकृतं

सङ्गीतराघवम्

சின்னபொம்மபூபாலர் இயற்றிய

சங்கீதராகவம்

பதிப்பாசிரியர்:
சாஹித்ய சிரோமணி,
S. இராஜலக்ஷ்மி, M.A., B.L.I.S.,
சம்ஸ்க்ருத பண்டிதர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

சங்கீதராகவம்

005

0472

T.M.S.S.M-2016

விலை : ரூ. 50

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: சங்கீதராகவம்
பதிப்பாசிரியர்	: S. இராஜலக்ஷ்மி
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	: 472
மொழி	: சம்ஸ்கிருதம் - தமிழ்
பதிப்பு	: முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	: 2005
தாள்	: TNPL 18.6 kgs.
நூல் அளவு	: 21 x 14 c.m.
பக்கங்கள்	: 100
படிகள்	: 500
எழுத்து	: 16 & 12
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலகம்
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: இசைநூல்
விலை	: ரூ. 50

வெளியீட்டாளர் முகவுரை

இந்திய இசை மரபில் இந்துஸ்தானி, கர்நாடக சங்கீதம், தமிழிசை எனப் பல்வேறு வகைபாடுகள் தொன்றுதொட்டுத் திகழ்கின்றன. இம்மரபுகளைக் காக்க சங்கீதசுதாகரம், ஜெயதேவரின் அஷ்டபதி,சங்கீத சுதா போன்ற பலநூல்கள் காலங்காலமாக பெரும் துணையாய் நிற்கின்றன. இவ்வரிசையில் கி.பி.16ஆம் நூற்றாண்டில் சின்னபொம்மபூபாலன் என்பவரால் எழுதப் பெற்ற இசை பற்றிய நூலே சங்கீதராகவம் என்பதாகும். சரசுவதி மகால் நூலகத்தின் சமஸ்கிருத பிரிவில் காகிதச்சுவடியாகப் பாதுகாக்கப்பெற்று வரும் இந்நூலில் 24 பதங்கள் கொண்ட 6 சர்க்கமுள்ள இராமகாதை விவரிக்கப்பெறுகின்றது. இசை பயில்வோர்க்கும், இசை வல்லுநர்களுக்கும் இந்நூல் மிகவும் பயன்படுவதாகும். இச்சுவடியை மூலத் துடன் தமிழ் ஒலிபெயர்ப்போடு சரசுவதி மகால் நூலக சமஸ்கிருத பண்டிதர் திருமதி எஸ். இராஜலெக்ஷ்மி பதிப்பித்துள்ளார். அவரது பணி பாராட்டுக்குரியதாகும்.

இந்நூல் சிறப்புற வெளிவர துணை நின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர் களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மா. வீர சண்முக மணி, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
11 - 8 - 2005

முகவுரை

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் மிகச் சிறப்பு வாய்ந்தது இசைக்கலை. தேவர்கள், சித்தர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், நந்தி, தும்புரு முதலானவர்களும், முனிவர்களும், இசை வல்லுநர்களாகவும் இசை இன்பத்தை அனுபவிப்பதையே தங்களது இன்பகரமான பொழுது போக்காகவும் அமைத்துக் கொண்டவர்கள். நம் முன்னோர்களும் இசைக் கலையில் மிகத் தேர்ச்சி பெற்றவர் களாக இருந்ததுடன் ஸாமகானம் என்று புகழப்படும் இசையினால் தேவர்களை மகிழ்விக்கவும் செய்தார்கள். இராவணேச்வரன் ஸாமகானத்தினால் தான் சிவபெருமானை மகிழ்விக்கவும் செய்தான். மாந்தர்களே யன்றி உலகினுள் ஜீவராசிகள் அனைத்தும்கூட இசை யின்பத்தை அனுபவிப்ப வைகளாக இருக்கின்றன. சிறப்பாக பசுக்களும், ஒன்றுமறியா பாலகர்களும், ஸர்ப்பங்களும்கூட இசை யின்பத்தை அனுபவிக்கின்றன.

पशुर्वेति शिशुर्वेति वेति गानरसं फणिः ॥ என்பர்.

இவ்வாறுசிறப்புவாய்ந்தஇவ்விசைக்கலை, குழல், வீணை, மிருதங்கம், தாளம், நாட்டியம் இவைகளுடன் இணைந்ததாக அமைந்திருக்கும் நிலையில் 'சங்கீதம்' என்று வழங்கப்பட்டு 'மார்க்கம்' 'தேசி' என்ற இரு பிரிவுகள்கொண்டதாகஇருந்தது என்று தெரிகிறது.

गीतं वाद्यं नर्तनञ्च त्रयं संगीतमुच्यते ।
मार्ग देशीविभागेन संगीतं द्विविधं मतम् ॥
महादेवस्य पुरतस्तन्मार्गाख्यं विमुक्तिदं ।
तत्तदेशगतया रीत्या यस्स्याल्लोकानुरञ्जकम् ॥ सङ्गीतदर्पणः

முதன்முதலாக மார்க்கம் என்ற வழியைப் பின்பற்றி இசைபாடுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர் வால்மீகி முனிவரேயாவார். வால்மீகி முனிவர் தசரத சக்கரவர்த்தியின் திருமகனான இராமபிரானது சரிதத்தை வாத்யங்களுடன் இணைந்து பாடுவதற்கு ஏற்றவாறு ஸம்ஸ்க்ருத மொழியில் சிறு சிறு பாக்களைக் கொண்டதாக 'இராமாயணம்' என்னும் நூலை இயற்றினார். இராமாயண காலத்திற்குப் பின் கி. பி. 11ம் நூற்றாண்டில் ஜெயதேவர் கீதகோவிந்தம் என்னும்

ச்ருங்கார மகாகாவியம் ஒன்று இயற்றினார். சம்ஸ்கிருத மொழியில் பன்னிரண்டு சர்கங்களைக் கொண்ட இது நாயக நாயகி பாவத்தில் தலை சிறந்ததொரு நூலாகவும் க்ஷேத்ரக்ஞர் என்பார் பதங்கள் இயற்றுவதற்கு ஒரு வழிகாட்டியாகவும் ஆயிற்று. இருபத்து நான்கு பாட்டுக்களோடு கூடிய இதில் பாட்டுக்கள் ஒவ்வொன்றும் எட்டுப் பகுதிகளைக் கொண்டிருப்பதின் காரணமாக இவைகளுக்கு அஷ்டபதிகள் என்ற பெயர் வழங்கி வருகின்றன. தீர்த்தநாராயணர் என்பாரும் கிருஷ்ணனைப் பற்றியதாக சமஸ்கிருத மொழியில் தரங்கிணீ என்ற அமைப்பில் பல பாட்டுகளை இயற்றினார். சங்கீத வளர்ச்சிப்படிகளிலே ஒரு திருப்பத்தைத் தரும் சங்கீதரத்னாகரம் என்னும் நூல் சாரங்க தேவரால் 13-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகும். இதுதான் சங்கீதத்திற் கென்றே வகுக்கப்பட்ட முதல் நூல் எனக் கருதப்படுகிறது. ஏழு அத்தியாயங்களுடன் கூடிய இதில் நாதம், ஸ்வரவித்தியாசம், ராகப் பிரிவுகள், தாள விளக்கம், வாத்திய விபரம் போன்ற விஷயங்களை விவரிக்கின்றார். அக்காலத்தில் இந்நூல் சங்கீத அம்சங்கள் பல வளர்ச்சி யுறுவதற்கு ஆதாரமாக இருந்தது.

14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட சங்கீத சுதாகரம் என்னும் ஹரிபாலரின் கிரந்தத்தில் முதன்முறையாக இந்திய சங்கீதத்தில் இரு பிரிவுகளின் குறிப்பு காணப்படுகிறது. அவை கர்னாடக சங்கீதம், இந்துஸ்தானி சங்கீதம் என்பன. ஜெயதேவரின் அஷ்டபதிகள் இந்தப் பிரிவு உண்டாவதற்கு முன்னரே இயற்றப்பட்டவை. எனவே அவைகள் இன்றும் கர்நாடக சங்கீதத்தை சார்ந்த ராகங்களில் பாடப்பட்டு வருவதைக் காணலாம். இவை போன்றே சின்னபொம்மபூபாலன் என்பவர் சங்கீதராகவம் என்னும் நூலில் இராமாயணக் கதையை சுருக்கமாக ஆறு சர்க்கங்களில் இருபத்து நான்கு பாட்டுகளாக இருபத்திநான்கு இராகங்களில் அமைத்துள்ளார். ஜெயதேவரின் அஷ்டபதி சாஹித்யங்கள் எவ்வாறு அமைந்துள்ளதோ அவ்வாறே சங்கீத ராகவ த்ருவபதங்களும் அமைந்துள்ளன. தமிழ் மொழியில் முற்பட்ட காலத்தில் தரவு என்ற சொல்லோடு அமைந்த

சாஹித்யங்கள் தமிழ் நூல்களில் இடம் பெற்றிருப்பதை காணும்போது தரவு, தருவு, துருவம் என்னும் இம்மூன்று சொற்கள் 'சப்தபவம்' எனவும் கூறமுடிகிறது. நாட்டிய சாஸ்திரத்தில் துருவபதம் குறிக்கப்பட்டுள்ளது. தென்னகத்தில் பல நாட்டிய நாடகங்களில் தரு என்ற சாஹித்ய உருப்படிகள் பலவிதமான சந்தங்களில் இடம் பெற்றிருப்பதை காண முடிகிறது. த்ருவம் தருவு என்ற சொல் சப்தபவச் சொல் என்று ஆய்வாளர்களின் கருத்து. பரதரின் இருபத்திமூன்றாவது அத்தியாயத்தில் 'த்ருவகானம்' எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. ப்ரவேசம், ஆட்சேபம், நிஷ்க்ராமம், பிராசாதிகள், காந்தாரங்கள் என ஐந்து வித த்ருவங்களைப் பற்றி நாட்டிய சாஸ்திரத்தில் பேசப்படுகிறது. நாட்டிய தர்ப்பணத்தில் த்ருவத்தைப் பற்றி லக்ஷ்ய லக்ஷண விவரணங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

நூலின் அமைப்பு

இராமாயணத்திற் காணப்படும், காண்டங்களைச் சர்கங்களாக்கி, இசை நாடகம் அல்லது இசைப் பேருரையுடன் இணைந்த நாட்டிய நாடகத்தின் அமைப்பில் இயற்றப் பட்டுள்ளது. இராமாயணக் கதையினின்று மாறுபடாத கதைக் கருவையும், காட்சி ஓட்டத்தையும் கொண்டது. இருப்பினும் கதைகூறும் பாங்கு, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல், கூறியது கூறாமை போன்றவை ஆசிரியரின் கற்பனைத் திறத்துக்குச் சாட்சிகள்.பலவிதமான யாப்புகளில் அமைந்த செய்யுட்களுடன், இசைப்பதற் கேற்றவாறு புனையப்பட்ட த்ருவபதம் மற்றும் பாடல் களுடன் இணைந்தது. கதையின் போக்குக்கு ஏற்றவாறு, அந்தந்தப் பகுதிக் கேற்ற சுவைக்கு ஒத்தவாறு ராகங்களில் அமைக்கப் பெற்றுள்ளது. மூலநூலில் காணப்படும் விரிவான பகுதிகளாகிய விசுவாமித்ரர் வருகை, யாகக் காட்சி, ஸீதா விவாஹம், இராம சீதா விவாதம், சூர்ப்பநகை வருகை, கரதூஷணவதம் , ஜடாயு மோக்ஷம், கபந்த வதம், வாலி வதம், இலங்கையை எரித்தல் போன்ற நிகழ்ச்சிகள் விரிவுபடுத்தப் படவில்லை.

நூலாசிரியரின் குறிப்பு

சின்னபொம்மபூபாலன் என்பவர் நளபொம்ம பூபாலனின் மகன். இவர் அப்பைய தீக்ஷிதரின் காலத்தவராவார். இவருடைய காலம் கி.பி. 1549-1602க்கு உரியதாகும்.அப்பைய தீக்ஷிதர் சின்னபொம்மனுடைய ஆதரவில் வேலூரில் பல ஆண்டுகள் வாழ்ந்துள்ளார். சின்னபொம்மபூபாலனின் தந்தை நளபொம்மன் சொக்கநாத நாயக்கரின் மந்திரியாக இருந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

மூலச்சுவடி வரலாறு

உலகப் புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகத்தின் சம்ஸ்க்ருத துறையில் சங்கீதராகவம் என்னும் இசைநூல் பர்னல் தொகுதியில் இடம் பெற்றுள்ள காகிதச் சுவடியாகும். நாகரி எழுத்தில் உள்ள (B. No. 6679, D. 10783) இந்நூலே தற்போது வெளிவருகின்றது.

நன்றியுரை

இந்நூலைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு மா. வீரசண்முகமணி, இ.ஆ.ப., அவர்களுக்கும், நூலக நிர்வாக அலுவலர் திரு. இரா. சுப்ரமணியன் எம். ஏ., அவர்களுக்கும், நூலக வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன். இந்நூலை வெளிக் கொண்டுவர எனக்கு ஊக்கமளித்த முன்னாள் பண்டிதர் திரு பத்மநாபசர்மா அவர்களுக்கும், இந்நூல் வெளிவர பல உதவிகள் புரிந்த நேஷனல் கல்லூரிப் பேராசிரியர் V. M. அனந்தநாராயணன் அவர்களுக்கும் அவ்வப்போது கருத்து பரிமாற்றம் செய்துகொள்ள உதவிய தெலுங்கு பண்டிதர் N. விஸ்வநாதன் அவர்களுக்கும், சம்ஸ்க்ருத பண்டிதர் முனைவர் ஆ. வீரராகவன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை நன்முறையில் அச்சிட்ட நூலக கணினி பிரிவினருக்கும் நூற்கட்டுப் பிரிவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

S. இராஜலக்ஷ்மி,
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
1 - 8 - 05.

சின்னபொம்ம பூபாலர் இயற்றிய சங்கீதராகவம் கதைச்சுருக்கம்

முதல் சர்க்கம்

காவியத்தை எழுதத்துவங்கும்போது ஆசி, வணக்கம், காவியத்தின் உட்கருவை உரைத்தல் ஆகிய மூன்று முறைகளில் அதன் வாழ்த்துப்பா இருக்க வேண்டும் என்னும் இலக்கணத்திற்கு இணங்க கவிஞர் தம் நூலைக் காவியத்தின் உட்கருவை உரைப்பதாக அமைத்துள்ளார் .

பகீரதனின் நற்பேரால் ஏழு பிரிவுகளாகப் பிரிந்து பூமியை அடைந்த கங்கைபோல ஏழு காண்டங்களால் பூமியைப் புண்ணியமடையச் செய்கிறது இராமாயணம். அதனைப் பேறு பெற்ற ஒருவன் வெகு நேரம் அக்காவியத்தை ருசித்து அனுபவிக்கிறான் என்று ஆசிரியர் தம்மைப் பேறுபெற்றவனாகக் கூறிக்கொண்டு தாம் இயற்றப்போகும் காவியம் இராமாயணக் கதையை ஒட்டியது என்பதனை உணர்த்துகிறார்.

இனிமையான சொற்களைக் கேட்க வேண்டும் என்றால் சங்கீத அமிழ்தத்தில் மீண்டும் மீண்டும் மூழ்க வேண்டும் என்றால், சான்றோர்களே அரசவையில் நளபொம்பூபதியின் மகன் ஸ்ரீபொம்மபூபதியின் இந்தக் கீதராகவத்தைக் கேளுங்கள் என்று ஆசிரியர் சம்பூ ராமாயணத்தை ஒட்டிய தமது கருத்தைக் கூறுகிறார். பிரம்மாவைப் போல, தானே வந்தடைந்த கலைமகளைக் கொண்ட வால்மீகிமுனிவரைப் போற்றி இராமாயணக் கதையைத் துவங்குகிறார்.

எல்லா மக்களாலும் போற்றத்தக்க பலம் படைத்தவரும், புவி முழுவதும் வியாபித்து நிற்கும் புகழைக் கொண்டவரும், சூரிய வம்சத்தில் தோன்றிய அரசர்களுள் சிறந்தவருமாகிய தசரதன், அரசர்க்கு அரசராய் விளங்கினார். அவர் பல யாகங்களை

நடத்தினார் என்பதும், அவிர்ப்பாகம் பெற புறப்பட்ட தேவர்கள் மஹாவிஷ்ணுவைக் கண்டு, இராவணனின் கொடுமைகளை எடுத்துக் கூறினார் என்பதை விளக்குகிறார்.

கருணைமிகுந்த அலைமகளின் கணவனே, முதன்முதலில் தோன்றியவனே, சிறந்த பாணத்தினால், பத்து தலையனை அடக்கு என்று கூறுகிறார்கள். பத்துத் தலையனை அழி, அழி, தலைவா சிறந்தவர்களை அவன் போரில் வென்றுவிட்டான். எல்லா உலகாலும் தாங்கமுடியாத நன்கு நிறுவப்பட்ட துயரை உடைத்து எடுத்துவிடு. உன்னை நான்காகப் பிரித்துக் கொண்டு அரசன் தசரதனின் குலத்தில் மனிதனாகத் தோன்று. தான் பிரம்மாவைக் குறித்து செய்த தவத்தினால் பெற்ற வரத்தால் எல்லா அரசர்களையும் கொன்றுவிட்டு தேவர்களைத் துயர்படுத்திய அவனை அழித்து, இவ்வுலகை எல்லாம் காக்க வேண்டும். இப்போது பஜனை செய்பவனையும், அரசனையும் காப்பாற்று. மண்ணிலும், விண்ணிலும் உனக்குத் தெரியாதது ஏதும் இல்லை. வழி கூறுவதற்கு நாங்கள் யார். அவனைக் கொல்ல ஒரு வழியை மனதிற்கொள்.

இராவணனின் கொடுமைகளையும், திருமாலின் பதிலையும், அவர் தசரதனின் மனைவியரைத் தனது அவதாரத்திற்கான இடமாகத் தேர்ந்தெடுத்ததையும் ஆசிரியர் விளக்குகிறார். அந்தணர்களை திடுக்குறச் செய்கிறான். தேவர்களை வெல்கிறான். இந்திரனைத் தடுக்கிறான். ஈசான்யன் முதலான திக்தேவதைகளை அவமதிக்கிறான் யமனின் கிங்கரர்களைத் தடுக்கிறான். யமனையே தனது வேலையைச் செய்யவிடாமல் செய்கிறான். ரம்பை முதலான அப்ஸரஸ் பெண்களைத் தன் வயப்படுத்திக்கொள்கிறான். என்னதான் சொல்வது அவன் என்னதான் செய்யமாட்டான் ? இவ்வாறு கூறப்பட்டதைக் கேட்ட ஹரியான கமலாபதி

பாம்பணை மீதிருந்து அப்படியே ஆகட்டும் என்று கூறி எழுந்தமர்ந்து, தனது கூர்மையான அறிவால் அரசிகளிடத்தில் நான்காகத் தன் உருவை எடுப்பதற்கு மனம் கொண்டார். எல்லா உருவங்களையும் ஒருங்கேக் கொண்ட இறைவன், தான் அவர்களின் கருவில் நான்காக உருக்கொண்டதால், இரு இதயம் படைத்தவர்களாக அம்மூன்று அரசிகளைச் செய்து, பூமியில் இனி ஏற்படப்போகும் நலங்களுக்கு வழிவகுத்தார்.

ஸ்ரீஹரி விளையாட்டாக வயிற்றில் நுழைய விரும்புகிறான். விராதனிடத்தில் ஏற்பட்ட விரோதத்தை அழிப்பதற்கும், மாரீசனைத் தடுப்பதற்கும், வானரர் களின் தலைவனான மிகுந்த பலமும் பொருந்திய, சுக்ரீவனிடத்தில் நட்பைப் பெறவும், வானரர்களின் தலைவனான வாலியின் மரணத்தை விரும்பியும், கற்களால் பெருங்கடலை சிறு குட்டையாக மாற்றுவதற்கும், இலங்கையை ஒழிப்பதற்கும், முன்னேற்பாடற்ற நிலையில் இருக்கக் கூறிய பத்துத் தலையனின் கழுத்துக்களே இல்லாமல் செய்வதற்கு ஆவல் உள்ளவரும் ஆகிய மஹாவிஷ்ணு தோன்றியதை பொம்மந்ருபதி மகிழ்ச்சியோடு எழுதினான்.

இராமர் முதலானவர்களின் பிறப்பும் விச்வாமித்திரனின் வருகையும் தசரதர் இராம லக்ஷ்மணர்களை சமர்ப்பிப்ப தையும் சித்தாசிரமம் சென்று விச்வாமித்ரர் இராமனிடம் பேசத்துவங்குவதையும் ஐந்து செய்யுட்களில் விவரிக் கின்றார்.

சித்திரை மாதத்தில் பிரபலமான சுகத்தைக் தரக்கூடிய கிரகக் கூட்டங்கள் சரியான இடங்களில் விளங்க நவமி திதியில் கௌசல்யா பிறர் வெற்றி பெற முடியாத மகனை ஈன்றெடுத்தாள். சுமித்திரை லக்ஷ்மணனையும், சத்ருக்னனையும், கைகேயி தர்மத்தில் நாட்டமுள்ள பரதனையும் ஈன்றெடுத்தார்கள்.

பிறகு தசரதன் தர்மத்தில் சிறந்தவர்களும் திருமாலின் நான்கு கைகளைப் போன்றவர்களும் ஆகிய நான்கு மக்களைப் பெற்று மகிழ்ச்சி அடைந்தார். இப் மகிழ்ச்சியை சிவபெருமானோ, பிரும்மாவோ மஹாவிஷ்ணுவோ அல்லது அரக்கர்களோகூட அமைந்ததில்லை. அப்படிப்பட்ட ஒரு சிறந்த மகிழ்ச்சி தசரதருக்குக் கிடைத்தது. பிறகு அவர்களுடைய திருமணம் பற்றி அவையில் சிந்தித்துக்கொண்டு இருந்தபோது ஒவ்வொரு யுகத்திலும் சாகசம் செய்யக் கூடிய முனிவர் விச்வாமித்ரர் வந்து சேர்ந்தார்.

பிறகு தசரதர் வசிஷ்டர் முதலான மூத்த அந்தணர்கள் உபதேசத்தின் பேரில் சௌனகரின் மைந்தரிடம் லக்ஷ்மணனோடு கூடிய இராமனை அளித்தார். அந்த இராமன் அவரைப் பின்தொடர்ந்துகொண்டு அந்தந்த இடங்களுக்குத் தகுந்த பலவிதமான கதைகளை அவரிடம் இருந்து கேட்டபடி வழியில் எதிர்ப்பட்ட அரக்கர்களோடு போட்டியிட்டுக் கொண்டு சித்தாசிரமத்தை முறைப்படி அடைந்தார். பிறகு ஆசிரமத்தை இராமலக்ஷ்மணனோடு அடைந்த விச்வாமித்ரர், முனிவர்களால் அனுமதிக்கப்பட்டு யாகம் செய்ய முடிவெடுத்து யாகம் இயற்றும்போது பயங்கரமான அசுரர்களால் நிறுத்தப்பட்ட யாகத்தைக் கண்டு வந்திருக்கும் மாரீசனைத் தெரிந்துகொண்டு இராமனைப் பார்த்து இவ்வாறு கூறினார்.

இராமா ! இராக்ஷஸ கூட்டங்கள் சினத்தோடு ஆகாய முழுமையும் ரத்தத்துளிகளால் நிரப்புகிறார்கள். மனதில் அச்சத்தை ஏற்படுத்துகிறார்கள். ரகுகுலத்தில் சிறந்தவனே, வில்லை நாணில் பூட்டு, தேவர்களைக் குறித்த இந்த யாகம் தடுமாறிக்கொண்டு இருக்கிறது. காட்டின் ஒவ்வொரு பகுதியிலும், பூமியின் ஒவ்வொரு பகுதியிலும், ஆகாசத்தின் ஒவ்வொரு பகுதியிலும், எல்லை மீறி செய்யப்படுகின்ற பதட்டத்தை

ஏற்படுத்துகின்ற பலவிதமான யாகங்களுக்கு எதிரான ஆயுதக் கூட்டங்களின் வேலையைப் பார். இந்த பூமி திசைகளிலும், திசைகளின் கோணங்களிலும் பார். இப்போது என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானி. ஆகாயத்தில் இப்போது சுபாகு என்பான் கர்ஜிக்கிறான். இவன்போரில் இராவணனோடு இருந்திருக்கிறான். இதை உன்னித்துக் கவனி, துயரத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் இந்த உலகத்தைப் பார். தாமதம் செய்யாமல் விரைந்து பயத்தைப் போக்கு, கொண்டாட்டத்தில் இருக்கும் மேகங்களைப் போல் கர்ஜிக்கும் இவர்களைப் புரிந்துகொள். முனிவர்களின் ரத்தத்தால் வயறு வளர்ப்பவனாயும், ஆகாயத்தில் சஞ்சரிக்கும், சாமர்த்தியமாக காரியங்களைச் செய்யும், இதயத்தில் படபடப்பை ஏற்படுத்தும் இந்த மாரீசனைக் கவனி, குணங்களில் சிறந்த, அரசர்களுள் சிறந்த பொம்மமகிபதியினால் சிறந்த இனிமையான இந்நூல் இயற்றப்பட்டு, சான்றோர்களின் மகிழ்ச்சிக்காக ராமனின் வரத்தோடு இயற்றப்பட்டது.

இவ்வாறு கூறப்பட்டதைக் கேட்ட இராமன் போரில் சுபாகுவினுடைய மிகப் பெரிய பாரம் மிக்க தலையை தேங்காயை உடைப்பதைப் போல் சுக்குநூறாக உடைத்து பிராம்மணர்களுக்குக் கொடுத்தார். மாரீசனை தனக்கு அளிக்கப்பட்ட கல்விக்கு ஏற்ப அஸ்த்திரத்தால் கட்டி சமுத்திரத்தில் தூக்கி எறிந்தார். பின்னால் ஏற்படப்போகும் மிகப் பெரிய போருக்கான விதையை விரும்பி தூவியது போல மாரீசனை சமுத்திரத்தில் வீசி எறிந்தார். மூன்று உலகங்களிலும் பரவி இருக்கும் இகழ்ச்சியை அழிப்பதற்கு தனது காலடிகளால் ஏற்பட்ட புழுதியைக்கொண்டு எல்லா திசைகளையும் புனிதப்படுத்தி பிறரால் சிதிலப் படுத்தப்படாத மைதிலியை விரும்பி மிதிலையை அடைந்து ஒப்புயர்வற்ற சிவதனுசை வாழைத் தண்டை உடைப்பது போல உடைத்தார்.

ஈடு இணையற்ற ஜனகன் என்ற பெயரைக் கொண்ட அரசனின் மனதில் உமியின் நெருப்பைப் போன்று கனன்று கொண்டிருக்கின்ற துயரை ராமன் தணித்தார். செந்தாமரைக்குச் சமமான உருவத்தைக் கொண்டிருக்கும் தளிர் போன்ற ஜனகரின் மகளின் கையை அதைப் போலவே இருக்கக்கூடிய கையால் ராமர் பிடித்தார். தேவர்களாலும் இயலாத எல்லா அரக்கர் கூட்டத்தையும் வென்ற செய்தியையும், திருமணத்தையும் தூதுவன் மூலமாக தெரிந்துகொண்ட தசரதன் வந்து கொண்டிருந்தபோது, தாங்கள் தோன்றிய வம்சத்தின் சிறப்பாலும், சிறப்பியல்புகளாலும் மிகச் சிறந்து விளங்கும் தசரதர், ஜனகர் ஆகிய இரு அரசர்களும் இணைந்து நிற்கும்போது ஏற்பட்ட ஒளி வெள்ளத்தைக் காண்பதற்கு மிகவும் அதிசயத்தை ஏற்படுத்தியது.

தன்னில் தூய்மையான எண்ணங்கள் மையங் கொண்டிருப்பதை உணர்ந்த பெண்ணாகிய சீதை, பின்னால் அதுவே நெருப்பின் மூலம் நிருபிக்கப்பட இருப்பதை அறிந்தவள் போல் காணப்பட்டாள். பின்னால் காட்டில் ஏற்படக் கூடிய பிரிவை முன்னமே உணர்ந்தவள் போல் கொடிகளால் தன்னை மறைத்துக்கொண்ட சீதை, தான் பட்டு வஸ்திரங்களைத் தாங்கமாட்டாள் என்பதை உணர்த்தினாளோ ! பின் ஒரு காலத்தில் காட்டில் நடந்து செல்லப் போவதால் ஏற்படும் கல், முள் இவற்றின் பாதிப்புக்களால் தோன்றும் துயரை இப்போதே உணர்ந்தவள் போல சீதை தனது தாமரைப் போன்ற கால்களை ஒவ்வொரு முறையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தர்மங்களை காப்பாற்றுகிற இராமன், சீதையை உடனே அழைத்துக் கொண்டு மந்திரிகள் பின் தொடர அயோத்தியைச் சென்றடைந்தான்.

★★★

இரண்டாவது சர்க்கம்

என் திசைகளின் அதிபர்களுக்கு ஒப்பான இராமன் அவைக்கு வந்தவுடன் கருணையினால் குளிர்ந்திருக்கும் தசரசன், உச்சிமுகர்ந்து இவ்வாறு கூறினான். எதிர்பார்ப்பவர்களைக்கூட அன்பு கொள்ளச் செய்யும் நற்குணங்களின் வரிசையைக் கொண்டிருக்கிறாய். அதனால் திசைகளும், திசைகளின் கோணங்களும் கூட புகழாகிய வெண்மையினால் அளவற்றுப் பிரகாசிக்கிறது.

இராமனே அரசனாக ஆகிவிடு. தோன்றியிருக்கும் இன்பத்தால் மக்களை இன்பப்படுத்து. எனது அம்சமே உனது அங்கங்கள் சீக்கிரத்திலேயே முடிசூட்டு விழா நீரினால் நனையட்டும். இங்கு எல்லா மக்களும் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய காட்சியாகிற உன்மீது வெண்கொற்றக் குடை விளங்கும் காட்சியைக் காண விரும்புகிறார்கள். இப்போது பரதன் தனது தாய்மாமன் வீட்டிற்குச் செல்கிறான் என்று அறிகிறோம். அதே நேரத்தில் எல்லா எதிரிகளின் பயத்திற்கும், குழப்பத்திற்கும் காரணமான அரசனின் பதவியில் நீ இரு.

உணவு, கல்வி தேவையான அளவு செல்வம் இதைத் தவிர இப்போது மிகவும் விரும்பப்படுகிற கண்ணுக்கும், கருத்துக்கும் மகிழ்ச்சி அளிக்கும் போற்றத்தகுந்த இந்த முடிசூட்டுவிழா நடக்க வேண்டும். நடக்கவிருக்கும் இந்த முடிசூட்டுவிழா எல்லா சிறப்பு அம்சங்களும் அமையப்பெற்றதாய் அமைந்துள்ளது. சிறந்த சுபகிரகங்களும் நட்சத்திரங் களும் சரியான இடத்தில் இருந்தபோது பிறந்த நீ, இந்த முடிசூட்டுவிழாவை மகிழ்சியுடன் ஏற்றுக்கொள். இவ்வாறு கூறி இராமனை அனுப்பி வைத்த அரசன் பிறகு

தனது அந்தப்புரத்தை அடைந்து கோபமே உருக் கொண்டிருந்த கைகேயியை பார்த்து, ஒரு சில வார்த்தைகளைக் கூறினார்.

அச்வபதியின் மகளே, நீ ஏன் இங்கு தரையில் படுத்திருக்கிறாய். என்னை நோக்கி குழப்பம் நிறைந்த கோபம் கொண்ட பார்வையை ஏன் வீசுகிறாய், துயரைவிடு, இன்பத்தின் உருவே, தாழ்மையான என்னைப்பார். மலர்கணையோனின் அம்புகளால் வீழ்த்தப்பட்டு, மிகவும் துயர்வுற்று இருக்கிறேன். கருணைக்கொண்டவளே, கருணைக்குப் பாத்திரமான என்னிடத்தில் உனது தயைக் கூர்ந்த இதயத்தை வை. கெட்ட மன்மதனால் அழிக்கப்பட்ட நடவடிக்கை கொண்ட என்னிடத்தில் இப்போது ஏன் கருணைப் பிறக்கவில்லை. செல்வம் அற்றவனை செல்வம் உள்ளவனாகவும், செல்வம் உள்ளவனை செல்வம் அற்றவனாகவும் ஆக்க, நீ விரும்புகிறாய். எவனைத் தடுப்பதென்பது இயலாதோ அவனுடைய பெரிய வீழ்ச்சியைக்கூட விரும்புகிறாயா ! ஏன் எனில் எனது ஆற்றல் எல்லாம் எங்கும் பரவியது. இந்த உடலும் உயிரும் பொருட்டல்ல. இவை எல்லாவற்றையும் சரியாக இருக்கும்படி செய் அல்லது அழித்துவிடு. நிலவு முகத்தவளே, எனது எல்லை இன்னது என்பதைக்கூறு. மௌனமாக இருக்காதே எனது பலத்தை அறிந்த நீ என்னிடத்தில் சந்தேகப்படத் தேவையில்லை. முதலில் பிறந்த மகன் இல்லாமல் ஒரு கன நேரம் கூட உயிரோடு இருக்கமாட்டேன். ஆகவே நான் உறுதியளிக்கிறேன். நீ எதைக் கட்டளை இடுகிறாயோ அதையே செய்கிறேன்.

இவ்வாறு பிதற்றுகிற அரசனிடத்தில் பூமியில் இருந்து எழுந்து கைகேயி எதைச்சொன்னாளோ அப்படிப்பட்ட சொல்லில் இருந்து அந்த அரசன் வேர்

அறுந்த மரம் போல் பிரக்ஞை இழந்தவராய் ஒரு சில அடிகள்கூட எடுத்து வைக்க முடியாமல் கீழே விழுந்தார். ராமனிடத்தில் உனக்கு பெருமை உண்டாகட்டும் என்று கூறி வார்த்தைகளைத் தேடி அலைந்து, இன்னும் ஒய்வு பெறாத நாக்கை மட்டும் உடைய தசரதன், 'செல் காட்டிற்கு' என்று ஆரம்பிக்கக் கூடிய சொற்றொடரை முடிக்கவிடாமல் ராமனும் அங்கிருந்து சென்று உடன்வர விரும்பிய வைதேஹியினிடத்தில் உரைத்தார்.

சீதையே மகிழ்ச்சியோடு வீட்டில் இரு. காட்டில் துயரை அனுபவிக்காதே. கொடுமையான காற்றையும், உஷ்ணத்தையும் குளிர்ச்சியையும் அறியாத சுகத்தை மட்டுமே ஏற்புடைய உடலை கொண்டிருக்கிற நீ காட்டிற்கு வருவது உகந்ததல்ல. யானைகளும், சிங்கங்களும் நூற்றுக் கணக்கில் இருக்கும் காட்டில் உனது வருகை வேண்டாம். வில்லும், வேலும், அசுரர்களும், ஒலி எழுப்பும் காட்டிற்கு செல்ல விரும்பாதே. இவ்வாறு இராமனால் கூறப்பட்டதைக் கேட்ட சீதை, பிரிவால் பயந்தவளாக, காட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். விதியும் இராமனோடு புறப்பட்டது. குணங்களின் இருப்பிடமான இராமன் காட்டிற்குச் சென்றான். அரசனான தந்தை தேவலோகம் சென்றபின், தாம் இராமனுக்கு செய்த கொடுமையை நினைத்து அரச பதவியைத் துறந்து மூத்தவனின் பாதங்களையே மீண்டும், மீண்டும் நினைத்துக் கொண்டு பரதன் காட்டை சென்றடைந்தான். தம்பியோடு கூடிய ராமனுடைய விருப்பமான இருப்பிடமாகிய சித்திரகூடமென்னும் வனப்பகுதியின் எல்லையில் தழுதழுத்த குரலில் மிகுந்த ஆவலுடன் பரதன் ஒரு சில வார்த்தைகளைக் கூறினான்.

'பரதன்,' கண்ணே நீ எப்போது இராமனை நோக்கி மகிழ்ச்சியுடன் பார்க்கப் போகிறாய் மேகக் கூட்டம்

போல் வர்ஷிக்கும் முடிசூட்டுவிழா அபிஷேக ஜலத்தைக் கண்டா, சிறந்த மணிகளை அணிந்ததினால் அகன்று அழகுற விளங்கும் மார்பைக் கண்டா, தனது தோள்வலிமையால் வென்ற ராக்ஷஸக் கூட்டங்களைக் கண்டா, நல்லத் தங்கத்தில் செய்யப்பட்டு கழுத்தில் உரசும் மணி குண்டலங்களைக் கண்டா, சந்திரனைத் தோற்கடிக்கும் முக ஒளியைக் கண்டா, நூற்றுக் கணக்கான எதிரி அரசர்களின் மகுடங்களால் ஏற்பட்ட ஒளியை தனது கால்களில் கொண்டிருப்பதைக் கண்டா, எனக்கு தாமரைப் போன்ற கையால் ராமன் எனக்கு ஆதரவு அளிக்கட்டும். சகோரப் பறவைப் போல காத்திருக்கும் எனக்கு சரியான பதிலைக் கூற வேண்டும். இவ்வாறு தனது சகோதரனிடம் இருந்து உதவியை எதிர்பார்த்த பரதனுக்கு தாயின் கட்டளையும், தந்தையின் கட்டளையும் மீறுவதென்பது சரியானதல்ல என்று ராமன் கூறினான். தன் மனதின் புண்ணிற்கு சரியான அமைதி ஏற்படாமல் தலையில் அண்ணனின் பாதுகையைச் சுமந்து கொண்டு அயோத்தியை நோக்கித் திரும்பினான்.

மூன்றாவது சர்க்கம்

தசரதன் மகனான இராமன் பெயரை நினைத்தாலே துயரைப் போக்கவல்லது. அவன் துன்பத்தைஅடைந்து இருந்தாலும், இவ்வுலகில் வெற்றி பெறுபவன் அவன் ஒருவனே. பூமிக்கு தலைவனாக இருந்தபோதிலும் பூமியில் பிறந்தவளுக்கு தலைவனாக ஆனான்.

ஒவ்வொரு முனிவர்களையும் சென்றடைந்து வணக்கத்தைப் பெற்றுக்கொண்டோ அல்லது வணங்கியோ, முனிவர்களின் நலத்தை விசாரித்துக்

கொண்டு நானேற்றப்படாத வில்லோடுகூட தண்டகாரண்யத்தில் இராமன் சஞ்சரித்தான். தொடர்ந்து காட்டின் வர்ணனைகளும், முனிவர்கள்செய்யக்கூடிய யாகங்களும் கூறப்படுகின்றன.

மேகக் கூட்டங்களுக்கு நடுவில் செல்லும் சூரியன் போல் இராமன் ஆஸ்ரமங்களுக்குச் சென்றான். கடைசியில் கடலைவற்றச் செய்து பாலைவனமாக்கிய அகஸ்திய முனிவரின் ஆச்ரமத்தை அடைந்தான். அகஸ்தியரைவிட புகழை விஞ்சும் அளவிற்கு பெருமை கொண்டிருக்கும் சுதிக்ஷண மகரிஷியை தேடிக்கொண்டு செல்லும்போது, அதிஷ்டவசமாக சரபங்கமகரிஷியின் ஆச்ரமத்தை அடைந்தார். பிறகு பஞ்சவடியை அடைந்து முதுமைப் பருவத்தை தழுவிக்கொண்டிருக்கிற சூர்ப்பநகை, கரன் ஆகியவர்களின் எல்லா படைகளையும் அழித்து, இராமனைப் பற்றிய செய்தியை தனது மூக்கும், காதும் அறுபட்ட பிறகு சூர்ப்பநகை பத்துத்தலை இராவணனிடத்தில் கூறினாள்.

அவனுக்கு ஒரு மனைவி இருக்கிறாள். அவள் மின்னல் போல வெளுப்பானவள். பிரம்மனின் முதற் படைப்போ என்று எண்ணப்படக் கூடியவள். அந்த அழகி அபகரிக்கப்பட்டாள், அவள் உயிரோடு வாழமாட்டான். அதுவே அவன் இறப்பதற்கு வழி என்று கூற, பிறகு அந்த க்ரூரமான இராவணன் ஒரு மாயையைப் பிரயோகம் செய்து இராமன் மான்களைப் பிடிப்பதில் ஆர்வம் உள்ளவன் என்பதைத் தெரிந்து கொண்டு சன்யாசி வேஷம் அணிந்து சீதை ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் இராமனுடைய ஆச்ரமத்தை அடைந்தான்.

ஜனகருடைய பெண்ணும், மூவுலகுக்கும் தாயும் தனியாக இருப்பவளுமான, இராமனின் பெயரை கூக்குரலிட்டு அழைத்த சீதையை தோள்களில்

தூக்கிகொண்டு எமனைப் போல் ஆகாயத்தில் எழுந்தான். கண் இமைக்காமல் அவளை எடுத்துச் சென்றான். அவளுடைய எந்த முயற்சியும் பலனளிக்காமல் போனது விதியன்றோ !

உண்மையிலேயே மகாவிஷ்ணு ராமன் என்ற பெயருடன் பூமியில் இறங்கி இருந்தாலும், மகாலக்ஷ்மியானவள் சீதையாகப் பிறப்பெடுத்திருந்தாலும், பொறாமைக்கொண்ட விதி தன் விருப்பப்படி செயல்பட்டது. பிறகு மாரீசனை அழித்து, லக்ஷ்மணனை வழியில் அடைந்து, குடிலைக் காலியாகக் கண்ட இராமன் பெரிதாக அரற்றினான். சீதையைப் பற்றிய செய்தியை காட்டில் விசாரித்துக்கொண்டு உயிர்விட்ட ஜடாயுவை வழியில் சந்தித்து விபரம் அறிந்து, தலை குனிந்தவராக வேறு எந்த வேலையிலும் ஈடுபடாமல் ஒவ்வொரு நாளும் காட்டில் அலைந்தார். இவ்வுலகம் முழுமையும் அறிந்த முதல்வன் காட்டில் அலைந்து கொண்டு கபந்தனைக் கொன்று உலகில் தன் புகழைப் பரப்பியவாறு வேதத்தாலும் அடையாளம் காணமுடியாத அவர் சபரியினால் போற்றப்பட்டவராக மெதுவாக லக்ஷ்மணனோடுகூட பம்பையைக் கடந்தார்.

நான்காவது சர்க்கம்

ஏ ராமா சிவபெருமானின் அஸ்திர பலம் பற்றியோ அல்லது உனது அஸ்திர பலம் பற்றியோ எங்களுக்குக் தெரியாது. ஆனால் இவை சம்மந்தப்பட்ட கதைகளை நாங்கள் அறிவோம். ஒரு காகத்தை திக்குத் திசை தெரியாமல் ஓடவைத்தாய். கபந்தனைக் கொன்றாய்,

புதிய நட்புகளை ஏற்படுத்திக் கொண்டாய். பிறகு தாமரை மலர்களும், ஆம்பல் மலர்களும் நிறைந்துள்ள பம்பையை அடைந்து, அக்காலம், வஸந்த காலமாக இருந்தபோதிலும் கையில் வில்லைக் கொண்டிருந்த ராமன், சீதையின் பிரிவினால் துயர் உற்றார்.

தென்றல் வீசுகிறது, குயில்கள் கூவுகின்றன: பலவிதமான மரங்களில் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. இங்கு எப்படி இருப்பது, மேற்கொண்டு எப்படி வாழ்வது என்று எனது இதயம் அளவுக்கு மீறி வருந்துகிறது.

சீதையே வா, மகிழ்ச்சியுடன் சிரிப்பைத்தா, அமுதத்திற்கு ஒப்பான பேச்சை என்னிடம் பேசு. துடிக்கின்ற ஆம்பல் மலருக்கு ஒப்பான பார்வையைக் கொண்ட பரிகாசத்தோடு கூடிய முகத்தைக் காண்பி. இங்கு பூத்திருக்கும் புரசங்காடுகள் உன்னை என் மனது இப்போது காட்டுத்தீ சூழ்ந்தது போல் உள்ளது. இந்நிலையில் நான் என்ன செய்வேன். உனது முக அழகை தாமரையிலும், கூந்தலின் அழகைவண்டுக் கூட்டங்களிலும் கண்டு. உன் அழகில் நினைந்து எனது உடல் மிகுந்த சோகத்தில் வீழ்ந்துவிட்டது. இவ்வாறு சீதையை நினைந்து அன்பு மேலிடுபவராக தனது இதயத்தில் முள் நெருடுவது போல் இராமன் உணர்ந்தார். மன்மதனின் கைகளில் அகப்பட்ட காற்று அங்கிருக்கும் மரங்களை திசைதோறும் மிக மெதுவாக அசைத்துக் கொண்டு, தாமரை மலர்களின் மீது உள்ள குளிர்ந்த மகரந்தத் துளிகளைக்கொண்டு வருகிறது.

ஜடாமுடியோடும், மரவுரியோடும் தங்களது உடலாகவேக்கொண்டு புலன் அடக்கத்தையும், மன அடக்கத்தையும் கொண்டு காட்டில் தங்களது அழகிய உருவத்தில் சஞ்சரிக்கும் ராமலக்ஷ்மணர்கள் வில்லோடும், அம்போடும், வீரத்திற்கும், வெற்றிக்கும் உருவம் போல் திகழும் அவர்கள் பம்பாநதி சார்ந்த காட்டில் அலைந்து திரிந்தார்கள் இவ்வாறு பம்பைக்

காட்டில் மிகவும் கவனத்தோடு சஞ்சரித்த அவர்களின் உருவத்தாலும், வில்லாலும், மதிக்கத்தக்கவர்களாகக் கொண்டு, சுக்ரீவன் கவலைக்கொண்டவனாக உள்ளதை உள்ளபடி அறிய ஆஞ்சனேயரை அனுப்பி வைத்தார்.

நீல மலையின் நிறத்தையும், தங்கத்தை உரைத்துப் பார்க்கும் கல்லின் நிறத்தைக் கொண்ட காந்தியைக் கொண்டவர்களும், சமமான வயது கொண்டவர்களும் ஆகிய அவர்களைப் பார்த்து, தாங்கள் யார், மலையை ஒட்டி உள்ள காட்டுப் பகுதியில் ஏதோ ஒன்றைத் தேடுகிறீர்களே மணிமயமான ஆபரணங்களும், சிறந்த அலங்காரங்களும் கொள்ளத்தக்க உடலைக் கொண்டிருந்த போதிலும் ஏன் நீங்கள் அலங்கரித்துக் கொள்ளவில்லை. ஜனநடமாட்டம் அற்ற காட்டில் என்ன தேடுகிறீர்கள். அழகான மணிகளால் அலங்கரிக்கப்பட்ட தங்கமயமான மகுடங்களுக்கு ஏற்ற தலையில் எதற்காக ஜடை கொண்டு இருக்கிறீர்கள். வில், அம்பினால் அனுமானிக்கப்பட்ட அரச குலத்தைக் கொண்டிருக்கும் நீங்கள் ஏன் முனிவர்கள்போல் விளங்குகிறீர்கள். சந்தனம் பூசிக்கொள்ள வேண்டிய மென்மையான உடலைக் கொண்டிருக்கும் நீங்கள் ஏன் காட்டுப் புழுதியில் அழுக்காக இருக்கிறீர்கள். சிறந்த பாதுகைகளுக்கு ஏற்ற மென்மையான பாதங்களைக் கொண்டிருக்கும் நீங்கள் ஏன் வேண்டுமென்றே கடினமான தரையில் கால்களை ஊன்றுகிறீர்கள் இவ்வாறு கேட்கப்பட்ட தொடர்ந்து சூரிய வம்சத்தில் உதித்த இராமன் அதற்கு ஏற்ற பதிலைக் கூறிக்கொண்டு சூரியனின் மகனை காணச் சென்றார். இராவணனால் எடுத்துச் செல்லப்படும்போது சீதையால் கீழே வீசப்பட்ட நகைகளை வானரங்கள் இராமனுக்குக் காட்ட அதைப்பார்த்தவாறு மனம் உடைந்த இராமர் இவ்வாறு கூறினான்.

இதுவன்றோ ஜானகியின் ஒட்டியானம், என்னைப்போல் அணைத்துக்கொள்ளும் இந்த

ஒட்டியானம். விதியே நன்கு செய்தாய். என்னை இவ்வாறு துன்பப்படுத்துகிறாயே ! அன்னப்பறவைமீது அமர்ந்து இருப்பவனே நீ இங்குதான் இருக்கிறாய். நீ எனக்கு சிறந்த நண்பன் அல்லவா ! கன்னத்தில் பிரதிபிம்பத்தை ஏற்படுத்தும் இந்தக் குண்டலங்களைப் பார்த்தவுடன் எனக்கு ஏற்படும் பிரிவாற்றாமையை காட்டிலும் துயரம் வேறு ஏதும் உண்டோ ! ஏ வெண்பட்டே என் துன்பத்தைப் போக்கடிக்கவில்லை. மணிகள் கோர்க்கப்பட்ட ஹாரமே ஏன் அறுந்திருக்கிறாய். ஆம் ! புரிகிறது. மலையில் இருந்து விழுந்திருக்கிறாய் அல்லவா, எனது அணிகலன்கள் அழகாக இருந்தபோதிலும், இவற்றைப் பார்க்கும்போது விஷத்தைப் போல் என்னைத் துன்புறுத்துகின்றனவே ! நான் என்ன சொல்வேன் என்ன அரற்றுவேன். எங்குதான் செல்வேன். சுக்ரீவனே, நண்பனே எந்த திசையில் ஜானகி கெட்ட மனிதனான, அயோக்கியனான, துர்புத்தி உடைய ஒருவனால் எடுத்துச் செல்லப்பட்டாள். கண் இமைக்கும் நேரத்தில் எங்கும் ஜொலிக்கும் நெருப்பால் எல்லா திசைகளிலும் உடனடியாக எரிப்பேன். பிறகு சுக்ரீவன் காண்பித்த வாலியை போரில் கொன்று மாலவதி என்று அழைக்கப்படும் சிகரத்தில் ராமன் மழைக்காலத்தைக் கழித்தான்.

சுக்ரீவனைக் காணாமல் இராமன் சிந்தையில் ஆழ்ந்தார். கையால் உலகத்தை ஒரே வீச்சில் அழிக்கக்கூடிய வில்லைக்கொண்ட லக்ஷ்மணன், குரங்கே சரண் அடைவாயாக என்று சுக்ரீவனைப் பார்த்துக் கேட்டான். இப்போது நீ சாதித்துவிட்டாயா ! ஹரிக்கு உபகாரம் செய்ய வேண்டியதை நினைவில் கொண்டுள்ளாயா ! குலபர்வதங்களின் பாறையின் நிறத்தை ஒத்தவனே தாமதமில்லாமல் சரணடைவாயாக. மிகுந்த பலம் பொருந்திய சாலமரங்கள் வேறு கதியை அடைந்துவிட்டது நினைவு இருக்கிறதா ! குல

பர்வதங்கள் மீது சஞ்சரிக்கும் சூரியனைப் போல் நாட்களைக் கழிக்கும் குரங்கில் சிறந்தவனே சீக்கிரமாக நீ தோல்வியைத் தழுவுவாய். இந்திரன் மகன் வாலியுடன் மீண்டும் சகோதரத்துவத்தை ஏற்றுக்கொள்வாயாக. அதற்கும் ஒரு அம்பு இருக்கிறது. கார் காலத்தில் சூரியன் இல்லாதபோது நீர்கொண்ட மேகங்கள் வெகுகாலம் என்னைக் காத்திருக்க வைத்தன. ஒவ்வாரு மலைச்சாரல்களில் நான் சிறிது காலத்தைக் கழித்துவிட்டேன். மேகங்கள் இல்லாத வானைப் பார்த்துவிட்டாய். தரையில் புல்பூண்டுகள் முளைத்ததையும் பார்த்துவிட்டாய். ஒழுங்கான நடைபாதையையும் கண்டுவிட்டாய். சிறந்த வானரன் ஒருவனையும் கண்டுவிட்டாய்.

இவ்வாறு லக்ஷ்மணனால் தூண்டப்பட்ட சுக்ரீவன் தனது சைனியத்தோடு ராமனை அடைந்து தனது வார்த்தைகளால் முறைப்படி எல்லோரையும் உற்சாகப்படுத்திக் கொண்டு. சரியாகச் செயலைச் செய்வதற்கும், சரியில்லாத செயலை செயலற்று ஆக்குவதற்கும் பிறரது செயலை மாற்றிச் செய்வதற்கும் ஏற்ற சக்தியுடைய வானரர்களை சீதையைத் தேடும்படி அனுப்பி வைத்தார். பிறகு அந்த வானர சேனை, ஆஞ்சனேயரை முன்நிறுத்தி தெற்குதிசை நோக்கிச் செல்ல ஆலோசித்து சமுத்திரத்தை தாண்ட விரும்பியது.

ஐந்தாம் சர்க்கம்

பிறகு காற்றின் மைந்தனான அனுமன் மனம் உடைந்துபோன வானரப் படையைத் தேற்றி தேவர்களுக்கு எதிரியான அரக்கனால் சீதை பலாத்காரமாக தூக்கிச் செல்லப்பட்டாள் என்பதை அறிந்து தடையின்றி கடலைத் தாண்டி, அச்சம் என்னும்

சந்தேஹம் இல்லாமல் நிற்கும் இலங்கையை இரவின் தொடக்கத்தில் சென்று அடைந்தார்.

வழியில்லாத வழியில் கோட்டையைத் தாண்டி பத்துத்தலை கொண்ட இராவணன் நகரில் விளங்கும் நூற்றுக்கணக்கான அழகான வீடுகளைக் கண்டான். அவர் எவ்வாறோ தேவர்களின் எதிரிகளுக்கு தலைவனின் அந்தப்புறத்தை அடைந்தான். அது கடலை போன்று விரிந்து பரந்து இருந்தது. அங்கு விண்ணுலகில் இருந்து கொண்டுவரப்பட்ட அழகிய மங்கையர் அனைவரும் இருந்தனர். காமவயப்பட்டு உறங்கும் பெண்களை அவர் கண்டார். மணிமயமான அணிகலன்களை அணிந்து மேற்கு தொடர்ச்சி மலையில் இருக்கும் கஸ்தூரிமான்ின் நறுமணத்தை மிஞ்சும் மணத்தோடு கூடியவர்களாக, இளவயதுடையவர்களாக அவர்கள் காணப்பட்டனர். அவர்கள் உறங்கும் காட்சியை அனுமன் கண்டான். சந்திரனுக்கு நிலையான ஒளி தரும் சூரியனின் ஒளிக்கற்றையான ஸுஷுமாவைப் போன்ற பிரகாசமுள்ள இராவணனின மனைவிகளையும் கண்டான். அங்கு புஷ்பகவிமானமும் இருந்தது. அதில் சுற்றிலும் தோரணமாக மணிகள் கட்டப்பட்டு இருந்தன. குபேரனின் பிரிவால் வருந்தி கண்ணீர் விடுவதைப் போன்று அந்த மணிகள் காணப்பட்டன. மந்தர மலையைப் போன்று பல ஏற்றத்தாழ்வுகளை கொண்டுள்ள இந்திரன் மீதும் மற்ற தேவர்கள் மீதும் எப்போதும் பகையை கொண்டுள்ள மதம் பிடித்த யானைப் போன்ற வீரம் கொண்ட இராவணனை அனுமன் கண்டார். காற்றின் மைந்தான் இவ்வாறு மெதுவாக ஒவ்வொரு வீடாக அலைந்து நிலமகளின் பெண்ணான ஸீதையை அறிந்துகொள்ள முடியாமல் பெறும் சிந்தையில் ஆழ்ந்தார். பிறகு உடனயே அரண்மனையை ஒட்டியுள்ள தோட்டத்தில் அவர் மறைத்து வைக்கப் பட்டிருக்கலாம் என்னும் கூறிய எண்ணம் அவர் மனதில் தோன்றியது. எனவே அருகில்

உள்ள அந்த அழகிய வனத்தை இரவில் அனுமன் அடைந்தான்.

ஒடுங்கியவாறு சிம்சுபா மரத்தின் அடியில் அமர்ந்திருக்கும், கணவனின் பிரிவினால் அழுத்தும் சோகத்தின் பாரத்தினால் வெகு காலம் வருத்தமுற்று இருக்கும் ஜனகனின் மகளை அனுமன் கண்டு ஆனந்தம் அடைந்தான். உயிரே இந்த உடலில் நீ எவ்வளவு காலம் வருத்தப்பட போகிறாய் சென்றுவிடு என்று மிக மெதுவாக உள்ளத்தில் இருப்பதை சொல்பவள் போல அவளின் பெருமூச்சுஇருந்தது. கண்ணுக்கு எதிரே தோன்றும் பொருட்களை லட்சியம் செய்யாமல் மனதில் தோன்றிய தன் கணவனை மீண்டும் மீண்டும் நினைத்துக்கொள்பவளாக இருப்பவளை எப்போதும் மேகக்கூட்டத்தின் சேர்க்கயினால் பொழிந்து கொண்டே இருக்கும் கண்ணீரைக் கொண்டுள்ள, தடையின்றி பெருக்கெடுத்து ஓடும் அலைகளைக் கொண்டிருக்கும் பரந்து விரிந்த துயரக்கடலை அறிந்துகொண்டு தனது பார்வைகளால் முகத்தின் எண்ணங்களை வெளிப் படுத்தத்தக்க அவள் தனது கணவனைத் தவிர வேறு எவரையும் கண்ணால் பார்ப்பதில்லை என்கிற நோன்பை மேற்கொண்டவள் போலவும், துயரச் சுவையே உருவெடுத்து வந்தவள் போலவும், துயரமே உருவாக இருந்துகொண்டு ஏதோ ஒரு பிரிவினால் ஏற்பட்ட துயரத்தினால் அசைவற்று விளங்கும் ஆழ்கடல் போலவும் அவள் விளங்கினாள். கடக்க முடியாத கடலைத் தாண்டிய வானரர் இவளைப் பார்த்தவாறு எந்த மகிழ்ச்சியை அடைந்தாரோ அந்த மகிழ்ச்சியில் ஒரு சிறிதளவாவது யார்தான் அடைவார் ?

பிறகு தலைமேல் கைதூக்கியவராக ஆஞ்சனேயர், சான்றோர்களைப் பலமுறை போற்றப்பட்ட, மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தக்கூடிய இராமனுடைய சரித்திரத்தை மீண்டும் மீண்டும் போற்றிக் கொண்டும், பிதற்றிக்

கொண்டும், சீதையின் முன்னிலையில் இவ்வாறாக வரத் தொடங்கினார். நான் ரகுநந்தனின் தாசன் சுக்ரீவன் என்கிற குரங்கின் அமைச்சன். அவனால் மிதிலை அரசனின் பெண்ணாகிற சீதையைத் தேடிக் கண்டுபிடிக்க அனுப்பப்பட்டிருக்கும் குரங்கு நான். எவளைக் குறித்து இந்த ராமன் வருந்துகிறாரோ, அலைகிறாரோ, கோபப்படுகிறாரோ, துயருருகுகிறாரோ பெரும் ஆவலோடு இருக்கிறாரோ, அழுகிறாரோ, அந்தப் பெண் நீதான்.

சீதையே உனது கணவன் பிரிவினால் மிகவும் வருந்துகிறான். தனது துயரை வெளியேற்ற மீண்டும் மீண்டும் நீண்ட பெருமூச்சு விடுகிறான். விஷம் கொண்ட பூக்களையும் பறிக்கக்கூடாத பூக்களையும் பறிக்கிறான். தனது உடல் வாடிவிட்டதை எண்ணுவது இல்லை. உதிக்கும் சூரியனைப் பார்க்கிறான். மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து தோன்றும் காற்றை அனுமனிடம் நினைவு கூறுகிறான். ஏதோ ஒன்றைக் கூறுகிறான். அப்படிக் கூறினால் அது உனது பெயராகத்தான் இருக்கிறது. மென்மையான நறுமணத்தை சுமந்து வரும் காற்றில் உயிர் வாழ்வதற்கு விருப்பம் இல்லாத தனது மனதைச் செலுத்துகிறான். அழகிய உடலமைப்பைக் கொண்டிருக்கும் என் மனைவியே இளமையானவளே நீ எங்கு இருக்கிறாய் என்று வருத்தத்தோடு நா தழுதழுக்க தனிமையில் அரற்றுகிறான் என்று ஆஞ்சநேயர் சீதையை இவ்வாறு தேற்றுகிறார்.

எதிரிகள் பலரைக் கொன்ற அந்த இராமன் இன்னும் வில்லில் கை வைப்பதற்கு ஒரு முகூர்த்த காலமே இருக்கிறது. அந்த இடைவெளிதான் தங்களால் பொருத்துக்கொள்ள இயலவில்லை. சோகத்தை விடுங்கள். தைரியத்தை விடாதீர்கள். இராமன் ஜெயிப்பான். தன் தம்பியோடு மதம் கொண்டவனாக

பலம் கொண்டவர்களின் சேனையோடு இங்கு வருவான். இலங்கையைப் பார்ப்பான். சந்தேஹ மில்லாமல் எதிரிகளின் துயரை நீ காதால் கேட்பாய். இராமனால் விடப்பட்ட கூர்மையான அம்புகளால் இலங்கை ஒரு கண நேரத்தில் அழியப்போவதை நீ பார்ப்பாய். இவ்வாறு இனிமையான வார்த்தைகளால் ஜானகியை சாந்தப்படுத்தி முத்திரை மோதிரத்தை கொடுத்து சூடாமணியை பெற்றுக்கொண்டு சமுத்திரத்தை தாண்டி அங்கதன் முதலான வானரர்களால் போற்றப்பட்டவனாக மகிழ்ச்சியோடு அஞ்சனையின் மகன் புறப்பட்டான். சீதை எந்தவிதமான குறையும் இல்லாமல் இருக்கிறாள் என்ற மகிழ்ச்சியான செய்தியைக் கூறினார்.

ஆறாவது சர்க்கம்

இராமன் அனுமனின் அமுதமயமான சொற்களின் பெருக்கில் துயர் கலையப்பட்டவராக அவரை அணைத்துக் கொண்டார். உலகையே தலைகீழாக திருப்புவதில் சிறந்த திறம் கொண்ட வானரர்களின் சேனையோடும், தம்பியோடும் வெற்றிபெற புறப்பட்டார்.

பிறகு வானர சேனையை மேற்கு கரையில் நிறுத்தி அதனைக் கடக்க விரும்பி தர்ப்பையில் சயனித்து வெற்றியின் சிந்தனையில் மனதை செலுத்தியவர், கோபம் கொண்டவராக அமைதியை விட்டுவிட்டு

இவ்வாறு கூறினார். இந்த நீரின் அதிபதி சமுத்திரம். நீரில் உள்ள ஜீவராசிகளைப் பற்றிதான் கவலைப் படுகிறதே ஒழிய என்னுடைய பலத்தின் மேன்மை பற்றி அறியவில்லை. நேர்மையற்றவர்களிடத்தில் நேர்மையாக நடந்து கொள்வது சரியல்ல என்று ஒவ்வொரு முறையும் நான் அறிந்து கொள்கிறேன்.

லக்ஷ்மணா இங்கு வா, வில்லைக் கொடு, அம்பை எடுத்துவா, இந்த பொறுப்பற்ற கடலை பாலைவனம் ஆக்குகிறேன். அதனால் வேகமாக அலைகழிக்கப்பட்ட திமிங்கிலங்களின் கூட்டங்கள் உடனே எழுந்து நாய் போல் ஒலியை எழுப்பின. ஒரு மூலையில் இருந்து நீருக்குள் விளங்கும் நெருப்பு தன்னை பளபளவென்று வெளிக்காட்டிக்கொண்டது. உயர்ந்து எழுந்த அலைகள் மீண்டும் மீண்டும் மலைகளின் மேல் சென்று அரைந்தன. அவை நீரின் நடுவே விளங்கும் நீர்யானைகளின் தலைகள் போல் ...சி அளித்தன. அப்போது கடலின் அடியில் இருந்த சங்குகள் சடசடஎன்று ஒலி எழுப்பி படபட வென்று உடைந்தன. அலைகளின் முனைகளில் தெரிந்த நெருப்பு போன்ற ஜ்வாலைகளால் நீரில் இருந்த உப்பின் உரு தெரிந்தது. கடலின் அடியில் விளங்கும் முத்துசிப்பிகள் பிளந்து முத்துக்கள் உடைந்து சிதறின. படகுகள் செல்லும் பாதையை காணமுடியவில்லை. குரங்குகள் எல்லா திசைகளிலும் சென்ற பாதச்சுவடுகள் மட்டுமே காணப்பட்டன. இப்போது பார். எனது நெருப்பை ஒத்த அஸ்திரத்தினால் இங்குள்ள மிகப் பெருங்கடல் குரங்குப் படைகள் நடப்பதால் ஏற்படும் புழுதியைக் கொண்டு விளங்கும்.

பிறகு அந்த கடல் நீரில் இருந்து அமைதியை விரும்பிக்கொண்டு சமுத்திரராஜன் எழுந்தான். பிறகு இராமன் கடலில் அணையைக் கட்டினார். அந்தப்

பாதையால் இலங்கையை அடைந்தார். பிறகு இராமன் நூற்றுக்கணக்கான அம்புகளால் இலங்கையை அழித்தார். பிறகு பிரம்மாஸ்த்திரத்தினால் பலம் பொருந்திய இராவணனைக் கொன்றார். பிறகு அனுமன் இராமனால் அனுப்பப்பட்டவராக சீதையிடம் சென்று எல்லோருடைய நலத்தைப் பற்றிய செய்தியைக் கூறி ஸ்நானம்செய்து அலங்கரித்துக் கொண்ட மன்னனின் மகளை அழைத்து வந்தார். அவள் இராமனுடைய சொற்களை கேட்டு அம்புகளால் துளைக்கப்பட்டவள் போல பொறுமை இழந்தவளாக நெருப்பில் நுழைந்தாள். சீதையை நெருப்பில் கண்டவானரங்கள் ஓலமிட்டன. உடனே ஆகாயம் முழுமையிலும், எல்லா தேவர்களும் கூட்டமாக வந்து சேர்ந்தனர். பிறகு தேவர்கள், வானரர்கள், ராக்ஷஸர்கள் ஆகியவர்கள் சொற்களைக் கேட்ட பிரம்மா இவ்வாறு கூறினார். இராமா, ஹ்ருஷிகேசா, புராணபுருஷா சீதை நெருப்பில் நுழையும் அளவிற்கு நீ ஏன் அவளை வெறுத்தாய் ? இந்த மூன்று உலகங்களுக்கும் நிச்சயமான அபகீர்த்தியை போக்குவதற்காக, எவருடைய கால்களைப் பிடிப்பதனால் தூய்மை ஏற்படுமோ அந்தப் பாதத்தின் துகள்கள் உண்மையாக கொள்ளப்பட்டன. அரக்கன் வீட்டில் வசித்தாள் என்பதை மட்டும் கொண்டு அந்த உலகத்தின் தாயை அப்படிப்பட்ட துயரில் இருந்து விடுவிப்பதற்காக இராமனின் பொருட்டு சோதனை செய்வதற்கு ஒரு புதிய நெருப்பு தோன்றி உள்ளது.

எல்லா தேவர்களும் எதிர்க்கமுடியாத இராவணனை அழித்தாயே. ஸ்ரீமன் நாராயணமூர்த்தியே தசரதருக்கு மகனாகப் பிறந்து, வசிஷ்டரின் வாக்கின்படி உலகத்தை காத்தாயே. எவருக்குத்தான் உன்னுடைய புகழ் தெரியும். போரில் மனித உருவத்தை காட்டி வெற்றி கொண்டாய். மனித உருவுக்கு ஏற்ற பேச்சு, துயர், மகிழ்ச்சி ஆகியவற்றைக் கொண்டிருக்கிறாயே. என்று பலவாறாகப் புகழ்ந்தார்.

பிறகு புஷ்பக விமானத்தில் போகும்போது இராமர் சீதையிடம் புகழோடு கூடிய எனது நண்பனான இராவணனின் தம்பியால் இது சாத்யமாயிற்று. ஜானகி மேன்மையான மணதோடு இதைப்பார். எல்லா வானரர்களின் உழைப்பும் என்னால் உபயோகப் படுத்தப்பட்டது. நெருப்பின் புதல்வனால் கொல்லப்பட்ட அரக்கப் படைத்தலைவனின் உடல் இங்கு கிடக்கிறது. இந்த இராவணனின் மகுடம் சிறந்த அம்புகளால் சிதிலப்பட்டுள்ளது. கும்பகர்ணனனை இவன் அழித்திருக்கிறான். வாமணன் இந்திரனை ஜெயித்தவனை அழித்திருக்கிறான்.

பிறகு இராமன் சீதையிடம் தான் தன்னை சேர்ந்தவர்களால் அழிக்கப்பட்ட இலங்கையையும், அரக்கர்களையும் காண்பித்தார். பிறகு கிஷ்கிந்தை, பம்பா நதி, பஞ்சவடி, அயோத்யா ஆகியவற்றை ஆகாயத்தில் இருந்து காண்பிக்கிறான். பிறகு அயோத்தியில் நுழையும் இராமன் பிராம்மணர் களாலும், வசிஷ்டராலும் முறைப்படி வரவேற்கப் பட்டவராக ரத்னமயமான பீடத்தில் சீதையோடு அமர்த்தப்பட்டார்.

வானரர்களால் பல்வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட புண்ணிய நீர் குடங்களைச் சுமந்தபடி எதிரியின் சிறந்த யானைக் கூட்டங்கள் அங்கு வந்து சேர்ந்தன. எல்லா திசைகளிலும் மங்கள வாத்யங்கள் முழங்கின. அவையில் இராமன் மனித உருவத்தில் விளங்கும்போது ருமையின் கணவனான சுக்ரீவன் முதலானவர்கள் தங்கள் சேனையோடு அமர்ந்திருந்தனர். முத்துமணிகளால் அலங்கரிக்கப் பட்ட மகுடத்தை அனுமன் எல்லோருக்கும் காண்பிக்க

பூமாரிப் பொழிந்தது. கலியின் அழுக்கை நீக்கவல்ல, பயத்தை போக்கவல்ல பொம்ம அரசன் செய்த நூல் எல்லோருக்கும் இன்பத்தை தரட்டும். பிறகு இராமன் பட்டாபிஷேகம் செய்துவைக்கப்பட்டான். தனது நற்குணங்களால் எல்லா மக்களையும் மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியபடி சூரியன் சந்திரன் உள்ளவரை மிகுந்த செல்வத்தை அடைந்தான். நளபொம்ம பூபாலனின் மகன் சின்னபொம்ம பூபாலன் செய்த சங்கீத ராகவம் என்ற மகாகாவியத்தின் ஆறாவது சர்க்கம் முடிவுற்றது.

श्रीः

चिन्नबोम्मभूपालकृतं

।। सङ्गीतराघवम् ।।

।। प्रथमः सर्गः ।।

श्री गणेशाय नमः ।

भाग्येनैव भगीरथादिव पुरा प्राचेतसादागता
या काण्डैरधिगत्य सप्तभिरिव स्रोतोभिरुर्वी तलम् ।
पुण्या पूरयति स्म भूमितनया भर्तुर्गुणाम्भोनिधिं
तां रामायणजाह्नवीमहरहर्धन्यश्चिरं गाहते ॥ 1

आहास्ते मधुरा धराधर सुधा धारैव यस्यादिमः
वाग्वृत्तिः प्रथमापि यस्य वनिता संल्लापलीलोत्सवः।
प्रायः प्रस्खलितानि च प्रथमतो राधाकुचाक्षरवान्
यश्चक्रे चरणार्पणानि रचये तस्मै परस्मै नमः ॥ 2

श्रोतव्यं मधुरं वचो यदि यदि स्मर्तव्यमाद्यं महः
सङ्गीतामृतमज्जनं यदि पुनः कर्तव्यमव्याहतम् ।
गीतं संसदि गीतराघवमिदं धीरास्तदाकर्ण्यताम्
साहित्यं नलबोम्मभूपजनुषः श्रीबोम्मभूमीपतेः ॥ 3

यं ब्रह्माणमिव स्वयं भगवती वव्रे गिरां देवता
ख्यातो यश्च रसज्ञया रघुवृषप्रागल्भ्यसारज्ञया ।
पुण्यश्लोकतमाय पूर्वकवये वल्मीकलब्धात्मने
तस्मै सम्प्रति साहितीपथमहापान्थाय बद्धोऽञ्जलिः ॥ 4

आसीदशेषजनतामहनीयशक्तिः
आसीम भूवलयविश्रुतपुण्यकीर्तिः ।
मार्तण्डवंशजनुषां मनुजाधिपानां
अग्रेसरो जगति पङ्क्तिरथाभिधानः ॥ 5

ईजानो विविधैर्मखैरनुकलं राजा रघूणां पतिं
भेजे कीर्तिमनुत्तमामुपचितां रेजे समेषूत्तमः ।
किं वाचामिह विस्तरेण बहुना कं वा न सम्प्राप्तवान्
आनन्दं सुतभाषितामृतझरीपानं तदेकं विना ॥ 6

अथ विदितसमस्तवेदितव्यः
विधिवदनुष्ठितवाजिमेधपूतः ।
रिपुबलविजयेन सम्भृतश्रीः
अतनुत तन्तुकृते स सप्ततन्तुम् ॥ 7

अत्रान्तरे मखहविर्ग्रहणाय सर्वे
बर्हिर्मुखाः शतमुखप्रमुखाः समेताः ।
ऊचुर्दशाननमहासमरप्रसिद्धाः
दुग्धाब्धिशायिनमुपेत्य सरोरुहाक्षम् ॥ 8

1. सौराष्ट्र रागम् अटताळम्

श्रीरमण पुराणपुरुष परुषेण
दारुण रभसतरेण शरेण ।
कारुणिक विभो न चिरेण

(ध्रुव पदम्)

जहि जहि दशवदनं हे स्वामिन् ।
पश्य गुणे महितानस्य रणे विजितान् ॥ 1

वश्यमवश्यमनन्तसमस्तम् ।
तस्य न चेद्धितनोषि निरस्तम् ॥ 2

उद्धर बहु विकलं
दुर्धरजगदखिलम् ।
निर्धारितमिदं अपविद्धान्या
अद्धा न हि भविता गतिरन्या ॥ 3

दशरथ नृपवंशे
परिगतबुध शंसे ।
अवतर भयकम्पित दशमूर्धा
कायमजित विधाय चतुर्धा ॥ 4

मानुषमात्मानं
कलय महात्मानं
केशव तपसा किल युधि विद्धा
वीशवधं विधिरस्य न परथा 5

पालनीयमखिलं
प्रमथितदनुजकुलम् ।
पालनीयतम एषोऽपि भजन्
पालय राजमुभयोरपि विमृजन् ॥ 6

अविदितमस्ति न ते
भुवि दिवि वा सुमते
के वयमहह विवेक्तुमुपायं
भावय मनसि विहन्तु मुपायम् ॥ 7

बोम्ममहीपतिना
कथितमिदं कृतिना
भवतु चिरं भुविरुचिरः विचित्रं
मुरहर नाम पदेन पवित्रम् ॥ 8

विप्रान्न्यक्कुरुते सुरान्विजयते शक्रं विरुद्धे दिशा-
मीशानानवमन्यते यमभटान् रुन्धे निरून्धे यमम् ।
रम्भामप्सरसो वशं कलयते ब्रूमः किमन्यद्विभो !
जाल्मः कामयते शचीमपि शवः किं नाम कुर्यान्न सः ॥ 1

इत्युक्तः कमलापतिः फणिपतेरुत्थाय दुग्धाम्बुधौ
अन्यैर्दुर्वचमुत्तरं दिविषदामोंकारमुच्चारयन् ।
निर्ध्यायाथ चतुर्भुजः चतुरया बुद्धया चतुर्धा निजं
रूपं भूपतिसुन्दरीषु जननी बुद्धिं वितेने हरिः ॥ 2

अथान्तर्वनीनां युगपदुदयद्दौहृदजुषां
क्षितीशः पत्नीनां अचरमगृहीता नृपसुता
स्वगर्भस्थध्यायत्परमपुरुषान्तर्नियमितान्
भुवो भावि क्षेमान् अमनुत तदेकीकृततनुः ॥ 3

सावेरीरागम् **आदिताळम्**

अयि हत मुनिसप्ततन्तुं-अधिगन्तुं
मारीचजननीमपि हन्तुं

ध्रुवपदम्

विशति हरावुदरं लीलया । 1

इच्छति सास्य विरोधं-अधिविरोधम् ।
अपि च मारीचोपरोधम् ॥ 2

अभिलषति स्म सुग्रीवे-हरिदेवे ।
सख्यममितबलप्रभावे ॥ 3

प्लवगपतिं निशिखेन-सुशिखेन ।
जिघांसति सास्म सुखेन ॥ 4

गिरिभिरियेष च सिन्धुं-लघुबन्धुम् ।
क्वचिदिव मितजलमन्धुम् ॥ 5

विजिगीषतेस्म विशङ्कं-अधिलङ्कम् ।
अनीकमुज्झितभयपङ्कम् ॥ 6

अकृतमतिंदशकं त्वं-हतकं त्वम् ।
विधातुमुदयदुत्कण्ठम् ॥ 7

विदधतु मुदा-मुदितानि विहितानि ।
बोम्बनृपति गदितानि ॥ 8

ततश्चैत्रेमासि प्रबलशुभशंसि ग्रहगणे
नवम्यां कौसल्या सुतमजनयद्राममजितम् ।
सुमित्रा सौमित्रिं सुतमथ शत्रुघ्नमपरं
तनूजं कैकेयी भरतमपि धर्मैकनिरतम् ॥ 1

अवाप्यैवं पुत्रानथ स चतुरो धर्मचतुरान्
चतुर्बाहो र्भागान् चतुर इव बाहून्दशरथः ।
यमानन्दं लेभे न खलु तमुपेयात्सुरपतिः
न शम्भुर्न ब्रह्मा न च स चतुरात्मा सुररिपुः ॥ 2

अथ तेषामुद्वाहं चिन्तयति रघूद्वहे सदसि ।
अभ्याजगाम स मुनिः सर्गान्तरसर्गसाहसिकः ॥ 3

अथ दशरथः शिष्टश्रेष्टैः वसिष्टमुखद्विजैः
कुशिक जनुषे ज्येष्टं पुत्रं ददौ सह लक्ष्मणम् ।
सतमनुसरंस्तास्ताः शृण्वन् कथा विविधाः
पथि प्रकृतदनुजस्पर्धः सिद्धाश्रमं समया ययौ ॥ 4

उटजमथ स राघवाभ्यां उभाभ्यां स्वमभ्यागतो
मुनिभिरनुमतो विधिज्ञैरदीक्षिष्ट शिष्टाग्रणीः ।
अथ समवधार्य घोरासुरारम्भसंस्तम्भितं
रघुतनयमुवाच मरीचमावेद्य वाचं मुनिः ॥ 5

3. पन्तुवरालिरागम् **अटताळम्**

विदधति रुधिरझरेण
करम्बितमम्बरदेशमशेषम् ।
मनसि भयं जनयन्ति
निशामय दनुजकुलानि सरोषम् ॥

ध्रुवपदम्

रघुवर रघुवर कलय शरासनमधिज्यम् ।
देवयजनमिदमङ्गं पुरा परिचरति परिस्खलदिज्यम् ॥ 1

प्रति विपिनपथम् अभिद्रवतो वसुधा विबुधानतिवेलन् ।
पश्य ससम्भ्रमचकित समुझितविविधमखायुध जालम् ॥ 2

चलति मही समहीधर सागरतरु विपिनासकलेयम् ।
अहह दिशाविदिशोऽपि निशीव विभावयात्किमह विधेयम् ॥ 3

गर्जति नभसि सुबाहुरसौ बहुबाहुजबाहुबलेन ।
निभृतमनुप्रहितो युधि दशरथनन्दन दशवदनेन ॥ 4

परिगतशोकमहो बत लोकय लोकमिममालोकम् ।
अलमलमकृतविलम्बमाचर सरभसमपगतभीकम् ॥ 5

सपदि नदन्तमवेहि घनाघनघर्घरमिममतिनीचम् ।
मुनिरुधिरैरुदरम्भरिमम्बरचरचरणं मारीचम् ॥ 6

पदुरपि च विपर्यस्यति कर्मसुहृदयजरणरणकेन ।
ऋत्विगसावुपसत्वरसुररिपुकटुकलकलजनितेन ॥ 7

मृदुलमुदारमिदं कृतमधिगुण बोम्ममहीपवरेण ।
भवतु मुदे विदुषां चिरपरिचितरघुपतिदत्तवरेण ॥ 8

इत्युक्तोऽथ तु नारिकेलजमिव स्थूलं भरं मस्तकं
तत्सौबाहवमाहवे स बहुधा भित्वा द्विजेभ्योऽदिशन्
मारीचं शरबन्धबद्धमुदधौ चिक्षेप शिक्षावशात्
वीरो भावि महारणाङ्कुरसमुन्मेषं चिकीर्षन्निव ॥ 1

दुष्कीर्तिः किल तामपि प्रमथितुं त्रैलोक्यनिश्चप्रचां
पश्यन्पादपरिग्रहस्य पदयोः पांसुं दिशं पावनम् ।
सम्प्राप्तो मिथिलां परैरशिथिलांमिच्छन्प्रियां मैथिलीं
शैवं चापमनुत्तमं कदलिकाभञ्जं बभञ्जाद्भुतम् ॥ 2

4. केदारगौलरागम् **अटताळम्**

शमित महाशपथोदित हृदयविषादतुषानल जाले ।
अनितर भूपति सुलभमुदञ्चति शर्मणि जनकनृपाले ॥

ध्रुवपदम्

जगृहे रघुकुलपतिरनुरूपं
जनकसुता करपल्लवतल्लज मरुणसरोजसरूपम् । 1

परिणयदूतमुखाधिगताखिल निशिचर विजयोदन्ते ।
दशरथनृपतिमणावुपसर्पति दलितसुपर्वदुरन्ते ॥ 2

निजनिज नियतशोहित निगदित निजनिजवंशचरित्रे ।
दशरथजनकनृपद्धितये सति विहित जनौघविचित्रे ॥ 3

विनिहितमात्मनि वीक्ष्य वधू शुचिभावविभावनमग्रे ।
व्रजति तदादिविलोकितुमिममनले सविधं समुदग्रे ॥ 4

वनभुवि भावि वियोगमनुस्मरतीव गुरौ निजचेलम् ।
विदधति मेलितमिथिलसुता पृथुवल्या दुरुजदुकूलम्॥ 5

अकृतसनीडसनीडतरोडुगण क्रमदर्शन खेदम् ।
निजदै तामुपदर्शयति धुरिवसिष्टमुनौ सह मोदम् ॥ 6

वृषदधिरोहनिषादटर्वी भुवि भाविनमुपलविहारम् ।
धरणिसुता चरणाम्बुरुहे परिशीलयति प्रतिवारम् ॥ 7

भवतु चिरादिह बोम्ममहीपतिकृतमधुरग्रथनेन ।
रघुपतिचरणयुगस्मरणं जगतो मृदुना वचनेन ॥ 8

स गोप्ता धर्माणां धनुरपहरन् भार्गवधृतं
द्विजानामस्यैव ग्रहमसहमानो रघुपतिः ।
नवोढा मुद्गाढप्रणयमुपसंगृह्यशनकैः
अयोध्यां सामन्तैरथपुरमयोध्यामभिययौ ॥ 1

रूढं पुण्यजनेषु वैरमवधीः कामप्यरण्ये स्त्रियं
राजन्यप्रशमैकतानहृदये विप्रेप्यहो दुष्कृतम् ।
नैतद्राघवशङ्कितव्यमपि वा विश्वैकमित्रस्य ते
विश्वामित्र समागमस्य भगवानेष प्रभावाङ्कुरः ॥ 2

॥ इति श्रीमत्पादजकुलकलशोदधिपूर्णसुधाकरस्य नलबोम्म भूपालतनुजस्य चिन्नबोम्म भूपालकस्य कृतौ सङ्गीतराघवाख्य महाकाव्ये प्रथमः सर्गः ॥

***

॥ द्वितीयः सर्गः ॥

अथ रामं गुणारामं अप्रघृष्य पराक्रमम् ।
लोक पालोपमं नाथमकामयत मेदिनी ॥ 1

आनाम्प राघवमथ प्रणतं सभायां
आघ्राय मूर्ध्नि विनयावनतं दयार्द्रः ।
आदर्शबिम्बितमिव स्फुटमात्मरूपे
भूपस्समीपगतमात्मजमाबभाषे ॥ 2

5. मोहनरागम् **आदिताळम्**

कलयसि विद्विषतामपि वत्सल वत्सलसद्गुण जालम् ।
येन दिशो विदिशोऽपि यशोधन धवलयसि त्वमवेलम् ॥

ध्रुवपदम्

अधिवस राघव राजपदं
जनतामनुरञ्जय जनितमुदम् ।
अङ्ग चिरादभिषेकजलप्लुतम्
अङ्ग मिदं भवदीयम् ॥ 1

इच्छति वत्स विलोकितुमय मखिलोऽपिजनरमणीयम् ॥ 2

मुखरूचिमभिलषतेव तवोपरि परिचलता न चिरेण ।
छत्रामिषेण दिदृक्षते मुखमावृतममृतकरेण ॥ 3

यावदितोऽधिगतो भरतो निजमातुलकुलमायाति ।
तावदधीशपदो भवभयबहुविह्वलनिखिलाराति ॥ 4

आशितमिष्टमधीतमुपार्जितमथ परमभिलषणीयम् ।
लोचनह्रदमुत सेचनमिममभिषेचनमतिमहनीयम् ॥ 5

भाविनि पुनरभिषेकमिह भवताचरता किल भाव्यम् ।
स्वहित पुरोहित हित हित वह हुतशेष भुजा भवितव्यम्॥ 6

अहनि शुभे महनीयशुभग्रहतारयुते जनितोऽसि ।
प्रथमगृहीतवधूतनया विनये च नये विदितोऽसि ॥ 7

मुदमुपरचयतु बोम्ममहीपतिना भणितमधिगुणेन ।
बहुमत पादजकुलकलशोदधि पार्विकहिमकिरणेन ॥ 8

इत्युक्त्वा विससर्ज राघवमथ प्राप्य स्वमन्तः पुरं
क्रोधागारगतां स्म केकयसुतां अभ्येति सान्त्वाय सः ।
अन्यस्यास्तनये शुभानि धटयन् अन्यां पुनःपुत्रिणीं
कस्तस्मादपरः तदात्वकुपितां तां पश्येदपि प्रेयसीम् ॥ 1

सबलादपविद्ध भूषणां तां
महिते वर्त्मनि रूढमूलभावाम् ।
मदनज्वरसन्निपातमूर्च्छा-
विवशः कानिचिदूचिवान्वचांसि॥ 2

6. मुखारिरागम् **अटताळम्**

इच्छसि किमिह न पृच्छसि किमपि न यच्छसि सबलिहासम् ।
तरुणि यथापुरमरुणतराधररूचिशबलितमयिहासम् ॥

ध्रुवपदम्

अश्वपते रहहसुते भवतीह किमिति भुवि शेते
किमिति च न मम ससंभ्रम चकित विलोचन गोचरता ते ॥ 1

शोकमिमं त्यज कोकसमस्त विलोकय मामतिहीनम् ।
कुसुमशरासकवोर शराहतिहतमिति छतमतिहीनम् ॥ 2

अयि दयिते मयि दयिते परिचयि हृदयमिदं सदयन्ते ।
द्रवति न सम्प्रति किमिति सुदति विदितमदनहतकोदन्ते ॥ 3

निर्धनमपि सधनं सधनमपिकमधनं अभिलषसि कामम् ।
कस्य निरोधनमनिरोधनमपि किमुत निधनमपि भीमम् ॥ 4

यन्ममबलमखिलं वसुवसुधा किमुत तनूरसवो वा ।
वितर विनाशयवा कुरु शशिमुखिनिखिलंमिदं परथा वा ॥ 5

मानिनि मानमिदानीमुदाहर मा भज मौनमहीना ।
अर्हसि शङ्कितुमहह नमामिह बलमात्मनि जानाना ॥ 6

अचर मजेननैयेन विनाक्षणमपि तनयेन भवेयम् ।
तेन शपेकरवाणि यदेव किमपि कथयेह विधेयम् ॥ 7

अरुणान्वयमणि करुणावरुणाकर विहितोपचयेन ।
बोम्मनृपामरतरूणा कृतमिदं गुरूणा पदबन्धेन ॥ 8

जाल्मे तस्मिन्वदति नृपतावित्थमुत्थाय भूमेः
यत्कैकेयी वचनमवदत्तस्य कस्मात्प्रवक्त्रा ।
यन्नाश्रौषीत्तरुरिव पतन्नस्तमूलस्समस्तं
ध्वस्तप्रज्ञः कतिपय पदारम्भ एव क्षितीशः ॥ 1

ददानि श्रेयस्ते महदिति समुच्चार्य वचना-
न्यविश्रान्तं जिह्वां व्रजविपिनमित्युक्तिमुखराम् ।
विधातुं व्रीलार्थं पितरमथ विन्दन्रघुपतिः
प्रयास्यन्वैदेहीमपि जिगमिषन्ती मकथयत् ॥ 2

7. गुम्मकम्बोदिरागम् **अटताळम्**

सुदति सुरासुर समर समय वरदायि जनककथितेन।
विपिनमवेहि विदेहसुते जिगमिषुमिह मामुदितेन ॥

ध्रुवपदम्

सीते गृहमधिवस सहमोदं ।
वनभुवि माभज तरुणि विषादम् ॥ 1

अविदितकटुपवनातपशीत सुखोचित तनुलतिकाभे ।
घनजघनस्तनमन्थर मृदुलचरण किसलय कृतशोभे॥ 2

पृथुकुचकलशवलग्नजितद्विप केसरि कुम्भवलग्ने
मा गतिरस्तु वनेतव दुर्मद गजराजरिपु शतलग्ने ॥ 3

मलयजयुजि कुचकलशयुगे तव मृगमद घन घन सारे ।
मासाति निपतत्कासरगकूलगहतोवनिरेणुरधीरे ॥ 4

धनुरनुजोभय सखमसुरनिवसनेषु वनेषु यियासुम् ।
मामनुसर सति मावत भीरु रणाये वा भि यियासुम् ॥ 5

तरुणि वनप्रियवीणा कलकलरव मधुरतरावापे।
व्रजमा पथि गजवैरि विभिन्नगजाधिप जनिताटोपे ॥ 6

अविरतवर्षजलाविल दुर्गमकर्दमिते पथि वन्ये ।
मा कुरु गुरुजघनस्तनमन्थरमङ्घ्रियुगं क्षितिकन्ये ॥ 7

सम्मतमिदमुदितं महितं भुवि वोम्ममहीपवरेण ।
शर्म तनोत् सुधर्माधिपः मतधर्म वर्म रुचिरेण ॥ 8

इत्युक्तापि च सीता नैव ननीता वियोगतो भीता ।
प्रस्थापयति विधिर्यः रामं स हि तत्र संरब्धः ॥ 1

गतवति गुणारामे रामे वनं मनुजाधिपे
पितरि दिवमारूढे रूढे च मातरि दुष्कृते ।
नृपपदमपाकुर्वन् गुर्वङ्घ्रियुग्ममनुस्मरन्
अभजत च चरामूर्तिः कीर्तिः श्रियो भरतो वनम् ॥ 2

रामस्य सानुजस्य प्रियधाम्नः चित्रकूटवनसीम्नः ।
उपकण्ठे सोतकण्ठं कानिचिदाहैष वचनानि ॥ 3

8. आहिरिरागम् झम्पतालम्

दरविकचनिलनलिनोदरदलोपमम् ।
चरणरुचिनिकृतमृदुपल्लवमनूपमम् ॥

धुवपदम्

लोचन कदानु रामं कलयिष्यसि मुदा निकामम् 1

विलसदभिषेक सलिलं स्नुतिमनोरमम्
कलित स जलासार जलद पटलोपमम् ॥ 2

महिततरहारमणिमधुरपृथुवक्षसम् ।
सहजनिज भुजयुगल बलविजित रक्षसम् ॥ 3

अतिमुकुरगण्डतलचलितमणिकुण्डलम् ।
द्युति विजित रजनिकरमुग्धमुखमण्डलम् ॥ 4

अरिनृपतिशतमकुटकलितनिजशासनम् ।
परिषदि महार्हमधिगतमुचितमासनम् ॥ 5

किमपि जगतामपि सदैकमवलम्बनम् ।
मम विदधतं करसरोजमवलम्बनम् ॥ 6

कनकनिकषोपमरुचाकृतसाहसिकम् ।
जनकसुतयाक्षणरुचेव च बलाहकम् ॥ 7

मनसि विदधतु मुदं इमानि वचनानि ।
चिन्नबोम्मभूपतिविहितरचनानि ॥ 8

सौमित्रिप्रणिबद्धवल्कलतरो सीताकराम्भोरुह-
प्रायोलूनवतंसपल्लवसखे शैलेन्द्रतुभ्यं नमः ।
यत्वं लोचन गोचरो मुहुरसि भ्रातुर्मुनिप्रेयसी
शापासङ्गमलिम्लुचैश्चरणयोस्स्पृष्टक्ष पत्यांसुभिः ॥ 1

अक्षोणी तनयाघनस्तनपरीरम्भप्रियं भावुकैः
अक्रुद्धयः त्सुखैरि जीवनकरालुण्टाकचण्डातपैः
अक्रीडादलितप्रचण्डपुरजित्कोदण्डवीरायितैः
अस्वच्छन्दनिरस्तभार्गवपरिस्पन्दैरलं दैवतैः ॥ 2

इत्थं भ्रातुस्सविधमुपयन्मन्यमानस्य तस्मात्
अर्थे मातुः जनकवचनादन्यदन्याय्यमेव ।
अप्राप्यैव स्वहृदयरुजाशान्तिमागादयोध्यां
शीर्षे कुर्वन्भुवनकुशलापादिपादुके सः ॥ 3

॥ इति श्रीमत्पादजकुलक्लशोदधिपूर्ण सुधाकरस्य नलबोम्म तनूजस्य चिन्नबोम्मभूपालकस्य कृतौ सङ्गीतराघवाख्ये महाकाव्ये द्वितीयः सर्गः ॥

॥ तृतीयः सर्गः ॥

पुण्यजनमथनहेतुः पुण्यश्लोकस्तथापि दाशरथिः ।
जगति जयदेकनाथः भूजानिरथापि भूमिजाजानिः ॥ 1

आसाद्य प्रतिपदमागतां नमस्यां
आपृच्छन्कुशलमनुक्षणं मुनीनाम् ।
ऐक्ष्वाकः शिथिलगुणं विधाय पाणौ
कोदण्डं विचरति दण्डकावनेषु ॥ 2

९. दिलहरिरागम् आदितालम्

कमलनयनया जनकतनयया सह सहितोऽवरजेन ।
निजरिपुजीवनकर्मसमापन भुजगायित सुभुजेन ॥

ध्रुवपदम्

मुदितमुनिजवं प्रविशति सदनम् तपसइदैकनिधानम् 1

परिचितहरिणैरपि निश्शरणै रुपचिततटिनीकूलम् ।
पटुतरतापस बटुचंटुलोदितमिगादम निगमवाचालम् ॥ 2

विकसितकमलैरम्बुभिरमलै रुपहितवहुसरसीकम् ।
काननकुक्कुटपटुचञ्चूपुट धृतबलि भक्तिपुलाकम् ॥ 3

ऋषिगणशरणीकृत पृथुधरणीरुह निकर निरवकाशम् ।
कुसुमसमित्कुशकाशपलाशपरिश्रितपरिसरदेशम् ॥ 4

परिलसदुटजं विकसितकुटजं पथिपथिरूढतनालम् ।
करसुखनाम्रितचत्वरतरुविटपाचित वल्कलचेलम् ॥ 5

व्रजति विरोधे मृतिपुपरोधे परिहत सरणि निरोधम् ।
कुपितमदोद्धत विबुधरिपुपति संहितवहुविधबाधम् ॥ 6

मुनिभिरुपगतैरसुरविनिकृतैरुपरचितवहुविलापम् ।
सामि समुज्झित कर्मभिरपि च मखिभिरुपसंहृतकोपम् ॥ 7

